**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 47** **நாள்: 31.03.2026**

## சென்னை மாவட்டத்தில் உள்ள 100 மின்னணு விளம்பரப் பலகைகள் மற்றும் 1000 பேருந்து நிறுத்த நிழற்குடைகளில் 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளிலும் வாக்காளர்கள் வாக்களிப்பதை உறுதி செய்திடும் வகையில், வாக்காளர்களுக்கு தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, பொதுமக்கள் மற்றும் கல்லூரி மாணவர்களைப் பயன்படுத்தி பல்வகையான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலமாக வாக்களிப்பதன் அவசியம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னை மாவட்டத்தில் 13 எல்.இ.டி. தொலைக்காட்சிகளுடன் கூடிய தேர்தல் விழிப்புணர்வு கண்காட்சிப் பேருந்து, வீடுகள் தோறும் திடக்கழிவுகள் சேகரிக்கும் பேட்டரியால் இயங்கக்கூடிய மூன்று சக்கர வாகனங்கள் மற்றும் காம்பாக்டர் பெரிய வாகனங்கள் மற்றும் அரசு பேருந்துகளில் "நம்ம தங்கா" எனும் காகம் சின்னத்தை (Mascot) மையப்படுத்தி தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள், எனது வாக்கு எனது உரிமை என்ற சுயபுகைப்பட (Selfie Point) பதாகை, கடற்கரையில் மணற்சிற்பம், மொம்மலாட்ட நிகழ்ச்சி, பாரா க்ளைடிங், மனிதச் சங்கிலி, ரங்கோலி, நாட்டுப்புற கலைஞர்கள் மூலம் விழிப்புணர்வு கரகாட்டம், கானா பாடல்கள், கும்மிபாட்டு, தப்பாட்டம் போன்ற கலைநிகழ்ச்சிகள், திடீர் குழு நடனம் (Flashmob) மற்றும் தேர்தல் தொடர்பான வினாடி வினா, கையெழுத்து இயக்கம், பொது இடங்களில் விழிப்புணர்வு பதாகைகள் மற்றும் தேர்தல் விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்றல் உள்ளிட்ட பல்வேறு தேர்தல் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள 100 மின்னணு விளம்பரப் பலகைகளில் தேர்தல் ஆணையத்தின் வீடியோ குறும்படங்கள் மற்றும் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய குறிப்புகள் திரையிடப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. மேலும், மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 1000 பேருந்து நிறுத்த நிழற்குடைகளில் "நம்ம தங்கா" எனும் காகம் சின்னத்தை (Mascot) மையப்படுத்தி தேர்தல் நாள் மற்றும் விழிப்புணர்வு வாசகங்கள் காட்சிப்படுத்தப்பட்டு வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**"தேர்தல் திருவிழா – தமிழ்நாட்டின் பெருவிழா"**

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**